## புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை – 2017

---

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2018 யூன் 19 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 2,357,890 தொகையான அதிகாரசபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட கற்பனைச் சொத்துக்களுக்குரிய கணக்கீட்டுக் கொள்கை நியமத்தின் 132 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3**

நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம், பொருண்மையான முன்னைய காலப்பகுதியின் மூலதன தவறுகள், அந்த தவறுகள் ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு ரீதியான பெறுமதியை மீண்டும் வெளியிடுவதன் மூலம் கடந்த காலரீதியில் சீராக்கப்பட வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டின் போது கட்டிடம் மற்றும் பொருத்திகளின் பெறுமானத்தேய்வு ரூபா 34,013 தொகை குறைத்தக் கணக்கீடு செய்யப்பட்ட தவறை திருத்துவதற்காக மீளாய்வாண்டின் திரண்ட இலாபத்திலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கிலும் மாத்திரம் சீராக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7**

(i) நியமத்தின் 25 ஆம் பந்தியின் பிரகாரம், அதிகாரசபை தாபிக்கும் போது சுகாதார மற்றும் போசனை அமைச்சிலிருந்து கிடைத்த நடைமுறையல்லாச் சொத்துக்களை நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அந்த சொத்துக்களின் கிரயம் ரூபா 6,369,803 தொகை 2016 சனவரி 01 ஆந் திகதி அதிகாரசபையினால் மூலதனமாக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த சொத்துக்கள் முறையாகக் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு ஆரம்பமாவது அதனை பயன்படுத்துவதற்கு தயார் நிலைக்கு கொண்டுவந்ததன் பின்னராக இருந்ததுடன் சொத்தொன்று பாவனையிலிருந்து அகற்றப்பட்டதன் பின்னர் பெறுமானத்தேய்வு செய்தல் நிறுத்தப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணானதாக சொத்து கொள்வனவு செய்த வருடத்திற்காக பெறுமானத்தேய்வு செய்வதற்கும் அகற்றப்படுகின்ற ஆண்டில் பெறுமானத்தேய்வு செய்யாமலிருப்பதற்குமான கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது. இவ்வாறு சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட திகதி கவனத்தில் கொள்ளப்படாமல் முழு வருடத்திற்காகவும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதன் காரணமாக முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் வருடாந்த பெறுமானத்தேய்வு முறையே ரூபா 837,624 இனாலும் ரூபா 399,748 இனாலும் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மூலதனச் செலவினத்திற்காக கிடைக்கின்ற அரசாங்க மானியங்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கையின் பிரகாரம் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்ற அளவிற்குச் சமமான அளவினால் ஒவ்வொரு ஆண்டினதும் வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்பட வேண்டுமெனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அரசாங்க மானியத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்காக முன்னைய ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் கணக்கீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமானத்தேய்விற்குச் சமமான அளவினால் அரசாங்க மானியம் வருமானமொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் பற்றாக்குறை முறையே ரூபா 4,043,243 இனாலும், ரூபா 8,782,878 இனாலும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு இருந்தன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவு | வாழ்க்கைச் செலவினப்படி உள்ளடக்கப்படாமல் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்பு பணம் என்பன கணிப்பீடு செய்யப்பட்டமையின் காரணமாக முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்பு என்பன முறையே ரூபா 28,704 மற்றும் ரூபா 46,696 தொகைகள் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் தொழில்தருனர் பங்களிப்பு முன்னைய ஆண்டின் போது ரூபா 71,760 தொகையும் ரூபா 10,764 தொகையும், மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 116,740 மற்றும் ரூபா 17,511 தொகையும் ஆக குறைவாகப் பங்களிப்பு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவு | அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் சம்பளம் அல்லது வேதனத்தின் கீழ் உரித்தற்ற சீராக்கல்படிகள் மற்றும் விஷேட படிகளை உள்ளடக்கி பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு | அதன் காரணமாக முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் முறையே ரூபா 19,762 மற்றும் ரூபா 120,255 தொகைகள் அதிகரித்து பணிக்கொடை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | அமைச்சரவை, அரச நிர்வாக அமைச்சு அல்லது பொதுத் திறைசேரியை குறிப்பாக அங்கீகரிக்கப்பட்ட நலன்கள் மாத்திரம் தனது நிர்வாக சபையின் அங்கீகாரமுள்ள சகல ஊழியர்களுக்கும் செலுத்த முடியுமாக இருந்த போதிலும், அமைச்சரவை, அரச நிர்வாக அமைச்சு அல்லது பொதுத்திறைசேரியால் அங்கீகரிக்கப்படாத ரூபா 10,000 தொகையான மாதாந்த படியொன்று அதிகாரசபையின் கணக்காளருக்கு 2016 ஒக்தோபர் முதல் 2017 செப்தெம்பர் வரையான காலத்தின் போது செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்தப் பணம் ரூபா 120,000 ஆகும். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 12,478,615 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,625,716 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 6,852,899 குறவொன்றைக் காணமுடிந்தது. ஊழியர் ஊதியம், ஒப்பந்த சேவைகள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பன அதிகரித்தமை என்பன நிதி விளைவு வீழ்ச்சியடைந்தமைக்கான பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

எனினும் நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கியதன் பின்னர் முன்னைய ஆண்டில் ரூபா 2,155,505 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 1,841,196 வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மாதிரிகளுக்கு இணங்கும் வகையில் மீளாய்வாண்டின் செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படாமையினால் அதிகாரசபையின் செயல்முன்னேற்றம் தொடர்பாக சரியான மீளாய்வொன்றைச் செய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினால் நிறைவேற்ற வேண்டிய கீழே குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கோ அல்லது அதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) முறையற்ற மருந்துப் பாவனையைத் தடுத்தல் அல்லது குறைப்பதற்காக தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச் சபையிடம் விசாரித்து வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்.

(ii) புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான சகல புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றத்தை ஆய்வு செய்தல் மற்றும் மதுசாரம் மற்றும் புகையிலை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் உள்நாட்டு, வலய மற்றும் சர்வதேச அமைப்புக்களினது பங்களிப்பைக் கட்டியெழுப்புதல்.

(இ) அதிகாரசபையினால் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்ற வேண்டிய நோக்கங்கள் நிறைவேற்றப்படாமையினால் ரூபா 12,300,000 நிதிஏற்பாடு மற்றும் 12 உப செயற்பாடுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 34,000,000 தொகையில் ரூபா 11.830,000 நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, இரண்டு உப செயற்பாடுகளில் நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 526,721 செலவிடப்பட்டிருந்தது.

## 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அதிகாரசபைக்கு அலுவலக வளாகமொன்றை நிர்மாணிப்பதற்காக 2009-2012 காலப்பகுதியில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒதுக்கப்பட்டிருந்த காணி பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையினால் அக்காணி வேறொரு நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அதிகாரசபையின் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக பெறுகைகள் நடைமுறைகளுக்குப் புறம்பாகவும், அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் விலை மதிப்பீடின்றியும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் துணைக் கம்பனியிலிருந்து வாடகை அடிப்படையில் கட்டிடமொன்று பெறப்பட்டிருந்தது. அந்த கட்டிடத்திற்கு இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை வாடகை விகிதத்தை மாற்றுவதற்கும் உரிய கம்பனியுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் செலுத்தப்பட்ட வாடகை முறையே ரூபா 7,888,407 மற்றும் ரூபா 8,443,954 ஆகும்.

## 5. நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்ளல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் வருட நிகழ்ச்சி நிரல் தொடர்பாக புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பாக தேசிய அதிகாரசபையினால் அறிவிக்கப்படாமையின் காரணமாக அதன் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் இலக்குகளை அடையக்கூடிய உப நிலையங்களும் இலக்கின் அடிப்படையில் அடைவுகளை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.